செ.வெ.எண்: 277 நாள்: 26.04.2018

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் Assistant Commissioner of Labour (Formerly named as Labour Officer) என்ற பதவிக்கான போட்டித்தேர்வுகள் 29.04.2018 முற்பகல் மற்றும் பிற்பகல் திருநெல்வேலி மாவட்டத்தில் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, (கல்லணை) தெற்கு மவுண்ட் ரோடு, திருநெல்வேலி டவுண் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இத்தேர்வு மையத்தில் 372 நபர்கள் தேர்வு எழுதவுள்ளார்கள். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேரூந்துகளை தேர்வு மையத்திற்கு இயக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி மையத்தில் காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தேர்வு எழுதுவோர் தேர்வு மையத்திற்கு முன்கூட்டியே உரிய நேரத்தில் தேர்வு எழுத ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் தேர்வு எழுதும் அறைக்குள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு நடைபெறும் வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் இதன் மூலம் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி